17.09.19 EVERWIN MATRIC.HR. SEC. SCHOOL Time: 2.30 Hrs.
Std: IX SUMMATIVE ASSESSMENT -1 Marks: 100

TAMIL - (PAPER-II)

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 14x1=14

1. வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது ______ எனப்படும்.
   அ) செய்வினை ஆ) தன்வினை இ) பயனிலை ஈ) பிறவினை
2. வினைப் பயனிலைக்கு அடையாக வருவது _________.
   அ) வினையடை ஆ) பெயரடை இ) செயப்படுபொருள் ஈ) வினைமுற்று
3. ஒரு தொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடத்தைப் _______ என்கிறோம்.
   அ) எழுவாய் ஆ) பயனிலை இ) பிறவினை ஈ) தன்வினை
4. திணை, பால், இடம், காலம் காட்டும் விகுதிகளைப் பெற்று வரும் வினை___.
   அ) தனி வினை ஆ) கூட்டுவினை இ) துணைவினை ஈ) செய்வினை
5. கூட்டுவினை_______ வகைப்படும்.
   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து
6. தமிழில் ஏறத்தாழ ______ துணைவினைகள் உள்ளன.
   அ) 20 ஆ) 30 இ) 40 ஈ) 50
7. அமைப்பின் அடிப்படையில் வினை _______ வகைப்படும்.
   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஆறு
8. கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக _______ அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் ______.
   அ) வந்தான், வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை
   இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டான்
9. வினை + வினை என்பது __________.
   அ) கேள்வி + படு ஆ) சொல்லி + கொடு இ) கீழ் + இறங்கு ஈ) பாடம் + படி
10. விகாரப் புணர்ச்சி ________ வகைப்படும்.
   அ) நான்கு ஆ) மூன்று இ) ஆறு ஈ) ஐந்து
11. பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் கூற்று எது?
   அ) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன.
   ஆ) புறப் பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.
   இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.
   ஈ) பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது.
12. வாழ்க்கைப்படகு என்பது ___________.
   அ) உருவகம் ஆ) உவமை இ) வேற்றுமைத்தொகை ஈ) உரிச்சொல்
13. மலர்க்கை என்பது ________.
   அ) உருவகம் ஆ) உவமை இ) வேற்றுமைத்தொகை ஈ) உரிச்சொல்
14. தை + பூசம் வல்லினம் மிகுமா?
   அ) மிகும் ஆ) மிகாது
   இ) சிலநேரத்தில் மிகும் ஈ) சில நேரத்தில் மிகாது

பகுதி - II (பிரிவு - அ)

எவையேனும் ஐந்தனுக்கு சுருக்கமான விடையளிக்க: 5x2=10

15. அ) உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும் என்பதற்கு எடுத்துக்காட்டுத் தருக.
   ஆ) நடப்பான்=நட+ப் +ப் +ஆன்
   இதில் எதிர்கால இடைநிலை_____, சந்தி __________
16. அ) கிளியே பேசு ஆ) பூக்களைப் பறிக்காதீர் ( எவ்வகைத் தொடர்)
17. பின்வரும் வினைமுற்றுச் சொற்களில் உள்ள பகுதியை மட்டும் எழுதுக.
   அ) பார்த்தான் ஆ) மகிழ்நதான்
18. தொடர் வகையைப் பொருத்துக.
   அ) பாம்பு பாம்பு - இரட்டைக்கிளவி
   ஆ) நண்பா கேள் - அடுக்குத் தொடர்
   இ) படபட - வினை முற்றுத் தொடர்
   ஈ) வந்தான் மன்னன் - விளித்தொடர்
19. தொடர்களை மாற்றி உருவாக்குக.
   அ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார். (பிறவினைத் தொடராக மாற்றுக).
   ஆ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா?
   (கட்டளைத் தொடராக மாற்றுக)
20. வேர்ச்சொற்களை வைத்து தொடர் உருவாக்குக.
   கேள், எழுது (வினாத் தொடராக மாற்றுக)

பிரிவு - ஆ

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க: 5x2=10

21. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக் காட்டுடன் எழுதுக.
22. பகுபதத்தின் உறுப்புகள் யாவை?
23. துணைவினைகளாக வழங்கப்படும் சொற்கள் நான்கினை எழுதுக.
24. கூட்டுவினைகளின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
25. இரண்டாம் வேற்றுமை உருபு எது? அதற்கு எடுத்துக்காட்டுத் தருக.
26. ஓரெழுத்து ஒருமொழிக்குப் பின் வல்லினம் மிகுமா? மிகும் என்றால் எடுத்துக்காட்டுத் தருக.
27. வேறுபட்ட வினையெச்சங்களைப் பயன்படுத்தி முதல்வினைகளை துணைவினைகளாக மாற்றுக.




பகுதி - III

மதிப்பெண்கள் 20

பிரிவு - அ

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி: (5)

28. சொற்பொருள் பின்வருநிலையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
   (அல்லது)
   உவமையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
29. சொற்களை இணைத்து தொடர்களை விரிவுபடுத்துக. (5 வரிகள்) (5)
   அரிசி போடுகிறேன்

30. துணைப்பாடம்: 1x5=5

'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்குக.

(அல்லது)

'வளரும் செல்வம்' மூலம் நீ அறிந்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

31. வடிவம் மாற்றுக: 1x5=5

பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து, அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம்பெறும் அறிவிப்பாக மாற்றுக.

மருதூர் அரசு மேல்நிலைப்பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்வி பணியை வழங்கி வருகிறது. இப்பள்ளி சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு சோற்றுப் பதமாய் மருதூர்ப் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த "உள்ளங்கையில் உலகம்" என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜூன் திங்கள், பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் (கின்னஸ் சாதனை படைத்த) முன்னாள் மாணவர் இன்சுவை நூலை வெளியீட்டு, சிறப்புரை ஆற்றுவார். மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.

பிரிவு - ஆ

32. காட்சியைக் கண்டு கவினுற ஆறு வரிகளில் எழுதுக. (6)



பிரிவு - இ

மதிப்பெண்கள் - 10

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி:

33. பொன்மொழிகளை மொழிப்பெயர்க்க: (2)

The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru.

34. கலைச்சொல் எழுதுக. (3)

i) Hero Stone
ii) Water Management
iii) Comparative Grammar

35. தமிழெண்களில் பொருத்துக: (5)

| | | |
|---|---|---|
| i) தொண்ணூறு | - | கரு |
| ii) எழுபத்தெட்டு | - | சரு |
| iii) பன்னிரண்டு | - | கூO |
| iv) பதின் மூன்று | - | கஉ |
| v) நாற்பத்து மூன்று | - | எஅ |

பகுதி - IV

பிரிவு - I

மதிப்பெண்கள் - 20

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி: 10x2=20

36. பிறமொழிச் சொல்லுக்கு நிகரான தமிழ்ச் சொல் தருக.

i) புக் ii) ப்ளாக்போர்டு

37. பெயரடை வினையடைகளை தேர்ந்து எழுதுக. (இனிய, பொதுவாக, பெரிய, அழகாக)

i) ________ ஓவியமாக வரைந்து வா.
ii) எல்லோருக்கும் _______ வணக்கம்.
iii) சங்க இலக்கியம் வாழ்க்கையை ________க் காட்டுகிறது.
iv) இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் _______ காட்டு.

38. பிழை நீக்கி எழுதுக.

சர்-ஆர்தர்-காட்டன் கல்லணையின் கட்டுமான உத்தி கொண்டுதான் தௌலீஸ்வரம் அணையைக் கட்டியது.

39. சொல்லுக்குள் சொல் தேடுக.

எடுப்பார்கைப்பிள்ளை

40. வல்லினம் இட்டு எழுதுக.

i) கத்தியை விட - கூர்மை ii) தமிழ் - தேன்

41. தொடர்தரும் பொருளை எழுதுக.

i) சின்னக்கொடி ii) சின்ன கொடி

42. மரபு இணைச் சொற்களை தொடரில் அமைத்து எழுதுக.

கண்ணும் கருத்தும்

43. பொருந்தாத சொல்லைக் கண்டுபிடி:

i) அ) கர்நாடகம் ஆ) கேரளா இ) இலங்கை ஈ) ஆந்திரா
ii) அ) கண்ணதாசன் ஆ) வைரமுத்து இ) சுரதா ஈ) ஓ. பன்னீர் செல்வம்

44. அந்தாதிச் சொற்களை எழுதுக. (நான்கு சொற்கள்)

விருது

45. பழமொழியைப் பயன்படுத்தி சொற்றொடர் அமைக்க:

மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்.

பகுதி - V

(மதிப்பெண்கள் -10)

கடிதம் எழுதுக: (10)

46. அ) உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் கால் முளைத்த கதைகள் என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

(அல்லது)

ஆ) உன் வகுப்பு ஆசிரியருக்கு விடுப்பு வேண்டி விண்ணப்பம் வரைக.